
தில்லைநாதன் பவித்ரன்



# குறி இடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைநாதன் பவித்ரன்

# குறி இடல்

வெளியீடு

சிறகுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறி இடல் : கவிதைகள் : ஆசிரியர்: தில்லைநாதன் பவித்ரன் : மொழி: தமிழ் : முதல் பதிப்பு: 2012 : பக்கங்கள்: ix, 45 : முகப்பாக்கம்: ச.லக்ஸ்மன் : உரிமை: ராகவிக்கு : அச்சாக்கம்: எஸ்.எஸ்.டிஜிட்டல்'ஸ் : விலை: ரூபா 150.00 : ISBN - 978-955-53380-1-1 : வெளியீடு: சிறகுகள் : தொலைபேசி: 0778191678

KURI IDAL : Poems : Author: Thillainathan Pavithran : Language: Tamil : First Edition: 2012 : Pages: ix, 45 : copy rights to: Rakavi : Cover Designed: S.Luxman : Printed by: SS Digital's : Price: Rs .150.00 : ISBN - 978-955-53380-1-1 : Publication: Sirakukal : Author's Tele: 0778191678



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களிடம் நான் சொல்ல விரும்புபவை....

பேசிப் பேசித் தீர்ந்த விடயங்களோடும் இன்னும் பேச வேண்டிய தார்ப்பரியங்களோடும் கடந்தகால வலிகளை, குரூரங்களை பதியப்படுத்துவதோடு எதிர்காலத்தின் கடத்தல்களுக்காக என்னுடைய இவ் இரண்டாவது தொகுப்பு வெளிவருவதாக நினைத்துக் கொள்கின்றேன்.

ஈழத்து இலக்கிய உலகில் என்னுடைய ரசவாதத்தின் பின்னரான என் சார்ந்த சுய ஏற்ற இறக்கங்களின், பெறுதல்களின் வெளிப்பாடுகள் என்னைச் சிறப்பாய் செதுக்கின. கால இடைவெளியில் கிடைத்த துறைசார் அனுபவங்கள், தேசிய, சர்வதேசிய படைப்பிலக்கிய நுகர்தல்கள் எல்லாமே இத் தொகுப்பு வெளிவர காரணமாகின்றன. அத்தோடு இத் தொகுப்பில் இலக்கிய பாரம்பரியம் மிக்க திருக்கோணமலையின் கவிதைப் பக்கங்களின் நெடுங்கால ஊடாட்டங்கள் சிலவற்றை கட்டுடைத்து அடுத்தகட்ட பாச்சலொன்றை முயற்சித்து பாரத்திருக்கிறேன். முடிந்தளவுக்கு "குறி" என்ற பதத்தை பன்மைப்படுத்தியிருப்பதோடு ஏனைய வரிகளையும் பன்மைப்படுத்தியிருப்பதாக நினைக்கிறேன்.

நினைவிருக்கும் போதெல்லாம் சுயநினைவோடு எழுதித்தீர்த்த வரிகளிலிருந்து சிலவற்றை தொகுத்திருக்கிறேன். எழுதிய முழுவதையும் தொகுப்பேற்றம் செய்ய முடியாத கட்டாயமும் எனக்கு இருக்கிறது. என் பேனாக்களும் சில வேளைகளில் விலக்கு நாட்களுக்கு உட்படுவதுண்டு. அந்நேர கழிவுகளை மிகக் கூடியளவுக்கு தவிர்த்திருக்கிறேன் என்றுதான் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருக்கும் வரிகள் ஒவ்வொன்றும் எனது, உங்களது இருப்போடு தொடர்புபடுத்தப்படுகின்றது. படிம, குறியீட்டழகியலோடு இங்கு அளாவுகின்ற ஒவ்வொரு வரியிலும் சந்தர்ப்பங்கள், அதன் இழப்புக்கள், இரு முனைத்தவறுகள், அதனூடான வலிகள் போன்றவற்றை உங்களால் உணரமுடியும். நான் உள்ளே சொல்வது போல "எதுவும் வேண்டுமென்று புனையப்படுவதில்லை" என்பதற்கிணங்க என்னால் உணரப்பட்ட அண்மைக்கால விடயங்களையும், வரலாற்றுத் தவறுகள் என நான் உணரும் சில விடயங்களையும், எம் வாழ்வியலையும், மனிதத்தையும், வலிகளையும், வெப்புசாரங்களையும் வரிப்படுத்துகிறேன்.

எவரையும் பழிப்பதற்கோ, ஒரு தலைச் சுமையோடு இனம் சார்ந்து முழங்கவோ நான் விருப்பப்படவில்லை என்பதை இத் தொகுப்பை வாசித்துச் சுவைக்கும் போது நீங்களே புரிந்து கொள்வீர்கள். சந்தர்ப்பங்கள் இழக்கப்படுதலின் போது அதை பெற்றுக் கொண்டவர்களையும் குறை கூறிவிட முடியாது. இருந்தாலும் பெற்றுக் கொண்ட முறை தொடர்பாக விவாதிக்கலாம் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு வரியிலும் தொங்கும் மனப் படிமங்களை விசாலித்துப் பார்க்கும் போதுதான் எனது நோக்கத்தையும் இத் தொகுப்பின் விமோசன மன்றாட்டங்களையும் உங்களால் உணர முடியும்.

நவீன உலகின் இலக்கிய வடிவங்களில் இன்றும் கவிதை தன் முன்னரான விம்பங்களை உடைத்து முன்னேறி வருகின்ற ஆயுதமாகி விட்டது. கவிதை ஒருவனில் உருவாகி பலரை உருவாக்குகின்றது என்பது போல கவிதையோடிருத்தல், அதனோடு பேசுதல் எனக்கு ஆத்ம சுகத்தை தருகிறது.

மேலும் என்னிலிருந்து விரிவனவற்றை மனதிருத்தி வடிவங்காக்கும் பாரிய சுமையை உங்களிடமே விட்டுவிடுகிறேன். அதனால்தான் எந்தவொரு வரி முடிவிலும் முற்றிடவில்லை. விரும்பினால் என் வரிகளுக்குப் பின்னால் நீங்களும் தொடர முயற்சிக்கலாம். ஏனெனில் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்குமான இருக்கை அடையாளங்கள் ஒன்றாகத்தானே இருக்கின்றன!

என்னோரே! கடமைகள் தனித்து ஒதுக்கப்பட்டவை அல்ல வெறுமனே படைப்பாற்றல் மிக்கவன் மட்டுமே தன்னை பலிக்கடாவாக்கிக் கொண்டு மீண்டு கொண்டிருப்பதை எந்தவொரு உயிர்ப்புள்ள சமூகமும் விரும்புவதில்லை. நவீன வாழ்க்கையில் இருத்தலின் அவசியம் விசித்திரமாகிக் கொண்டிருக்கையில் எமது மொழிக்கும், சமயத்துக்குமான கடமைகளை நிறைவேற்றிக் கலாசார ஒற்றுமையூடான சமூகக்காப்பை உறுதிப்படுத்தல் எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

வாழும் உறவை அழித்துவிட்டு சலனமில்லா மரணத்தை நோக்கிச் செல்லும் வாழ்க்கை வெறும் செய்வினைத் தகடாகிவிடக் கூடாது. இந்தக் குறி உங்களுக்கு புதிய புரிதல்களை தரலாம். முரண்களை கிளறலாம், மாறுபட்ட விமர்சனங்களைத் தரலாம். ஏன் என்னைப் பற்றிய விசனங்களை எடுத்தெறியலாம். எதுவாய் இருப்பினும் உங்களின் ஆழ் நிலைத் துலங்கல்கள் காலவெளியில் ஏற்படும் இவ் வரிகளின் அநாதைத் தன்மையை நீக்கும் என்ற நம்பிக்கையில் இதுவரை என்னோடு பயணித்த உறவுகளின் உணர்வுகளை புறந்தள்ளி விட்டு மீண்டொரு பதிகையில் பேசும்வரை தற்காலிகமாய் விடை பெறுகின்றேன்.

அன்பன்
தில்லைநாதன் பவித்ரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி, ஞானம், மல்லிகை,
நீங்களும் எழுதலாம், ஓசை, மகுடம், நண்பர்கள்,
குடும்பத்தினர், ஊடகவியலாளர்கள், என் ஆசிரியர்கள்,
அச்சகத்தார், திருமலை தமிழ்ச் சமூகம்,
திரு பெரிய ஐங்கரன் அவர்கள், இலக்கிய வாதிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைநாதன் பவித்ரன்......

1990.06.30 மூதூரில் பிறந்த பவித்ரன் திருக்கோணமலையில் வசித்து வருபவர். உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கல்வி பயிலும் போதே தன்னுடைய பதினைந்தாவது வயதில் கவிதைகளை எழுத முனைந்த இவர் 2006 இல் ஈழத்து இலக்கியத்தோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

உள்நாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டுமல்லாது தமிழ்நாட்டு சஞ்சிகைளிலும் எழுதிவரும் பவித்ரனின் முதலாவது கவிதைத் தொகுப்பான ரசவாதம் 2010 இல் வெளிவந்தது.

தற்கால நவீன வடிவில் கவிதைகளை எழுதி வரும் இவர் அரங்கங்களில் மரபு வழி சார்ந்து பா வடிவில் கவி பாடலை வழக்கமாகக் கொண்டவர். 2010 க்கு பின் பல உள்ளூர், வெளியூர் அரங்கங்களில் தனது கவியாற்றுகையை பதித்துள்ளார்.

திருக்கோணமலை இளங்கோ கழக செயலாளராகவும், பகிர்வுகள் இலக்கிய அமைப்பின் ஸ்தாபகர்களுள் ஒருவராகவும், கலை கலாசார அபிவிருத்தி மையத்தின் உறுப்பினராகவும் மேலும் திருக்கோணமலையின் பல்வேறு சமூக, கலாசார, இலக்கிய அமைப்புகளிலும் செயல் புரிந்து வருகிறார். திருக்கோணமலையின் பிராந்திய செய்தித்தாளான மலைமுரசின் உதவி ஆசிரியராக பணிபுரியும் இவர் தனியார் கல்வி நிலையங்களில் அரசியல், வரலாறு ஆகிய பாடங்களை கற்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். அத்தோடு பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாக இளங்கலைமாணி பட்டப்படிப்பையும் மேற்கொண்டு வருகிறார்.

இது பவித்ரனின் இரண்டாவது தொகுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
அப்பா தில்லைநாதனுக்கும்
அம்மா ஜமுனாவுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதனுள்

இடுக்கினுள் உயிர்த்தல்
குறி
பறவைகள் வரும் நாள்
இரவுடனான கடவுளின் முடிவு
ஊமைக் கால்கள்
சற்று நாள் முன்னரான வலிமை
சுதந்திரதின வாழ்த்துக்கள்
தொலைதல் ஊடகம்

தொடரும் தவிப்புக்கள்
பேய் மரங்கள்
அவர்கள் அறிந்திருக்க வேண்டும்
மறுகட்டம்
அறிக்கை
சலனமற்ற புரட்சி
இனி எதைத்தான் செய்ய முடியும்
கடிவாளப் பிரயத்தனம்
வீடு

பௌர்ணமி இருள்
டைனோசர்கள்
உன் பற்றி நான்
மீளும் சுவாலையும் இறுதி விந்தும்
மலட்டு விதைகள்
பாதையும் பாம்பும்
ஊழிக்கால அவதாரங்கள்

நிலம் விழுங்கி
மன்றாட்டு
இறுதி வாசகம்

இன்னும்........ சில
தலைப்பிடாத வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடுக்கினுள் உயிர்த்தல்

வன்மங்களின் மத்தியில்
உயிர்ப்புக்கள்
உயிரூட்டப்படுகின்றன
ஆழ்ந்து பயணித்து
அசைத்துப் பிடுங்காதவாறு
இடுக்கினுள் நுழைகின்றன

பிறத்தலும்
பிறந்த பின் இறத்தலும்
ஒரு முறை அல்ல
மீண்டும் மீண்டும்
இடுக்கினுள் ஆரம்பிக்கின்றன

ஏக்கங்களிலும்
விம்மல்களிலும்
நோய்மைகளிலும்
மேலோங்கியவாறே
பயங்கரமாய் தோன்றும்
வலிகளோடு

ஒரு குறிப்பைச் சொல்ல
ஓராயிரம் கொலைகளை
செய்பவனை போலவும்
பல குறிப்புகளுக்காக
ஒரு சில வரிகளை
செய்பவனைப் போலவும்
சலனம் கடக்கும் உயிர்ப்புக்கள்

மீண்டுமொரு காட்டிலோ
நதியிலோ கடலிலோ
உயிர்த்தலின் ஈடுபாட்டில்
இடுக்கினுள் நுழைகின்றன

மீண்டும் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறி

குறி வைத்து
சில கற்களை
எறிவதற்காய்
கைகளில்
சில கற்களை
எடுத்துக் கொண்டவர்கள்

தமது
நோக்கத்திற்கேற்றாற் போல்
சில கற்களை
குறிவைத்தார்கள்

பக்கமாக
நேராக
கண்ணெதிரே
தெளிவாக
தமது கருத்தியலை
வைத்து எறிந்தார்கள்

குறி தவறிப்பட்ட
கற்களிலும்
தமது பார்வையை
திருப்பியவாறு கூறினார்கள்

குறி வைக்கப்படாத அவையும்
தம்மால் குறி வைக்கப்பட்டவை
என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 01

ஒரு கவிஞன்
எவ்வித
தயார்ப்படுத்தலோடும்
எங்கும் செல்வதில்லை
இருந்தாலும்
அவன் குறியிலிருந்து
ஒரு குழந்தை
பிறந்துவிடுகிறது
அவனது நிர்வாணத்தைப்
பொருட்படுத்தாமலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகள் வரும் நாள்

அவர்கள்
எங்கும் தொலைந்து
போய்விடவில்லை
ஓர் நாள் வருவார்கள்

நாங்கள் நிர்மூலமாகும்
போது போனவர்களை
நன்றாக எனக்கு
நினைவிருக்கிறது

அவர்கள்
கதிர்களூடாக வரலாம்
காடுகளிலிருந்து வரலாம்
அவளிலிருந்தும்
அவனிலிருந்தும்
என்னிலிருந்தும் வரலாம்

வீரஞ்செறிந்த விந்துகளாக

நிச்சயம்
ஓர் நாள் வருவார்கள்

அடையிலிருந்து
அக்கினிப் பறவைகளாய்
அவர்கள் வெளிவரும் அந்நாளில்
வானம் உடையும் ஓசையை
உங்களால் கேட்க முடியும்

நதியினாலும்
நதியிலிருந்தும்
தொலைந்த அவர்களுக்கு
ஒரு வேளை நதிக்கரைகளே
அடைக்கலம் தர முற்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டுமொரு
நாகரீகத்தை வெளித்தள்ள
நிச்சயம் ஓர் நாள் வருவார்கள்

அந்நாளில்
உற்றுக் கவனியுங்கள்
வானமுடையும் ஓசையை
உங்களால் கேட்க முடியும்

உங்களில்
ஒருவராவது கேட்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுடனான கடவுளின் முடிவு

இந்த மாலைப் பொழுது
மரணம் புதைந்த
நிசப்தங்களை இரவுகளாக்கி
புறப்படுகின்றது

ஊரை விழுங்க
காத்திருக்கும் கடல்
அதில் விழப்போகும் நிலவு
புற்று நீங்கிய பாம்புகள்
எல்லாமே ஒருவிதமாக வாழ்வை
எச்சரிக்கத்தான் செய்கின்றன

இவ் மாலைப் பொழுதின்
மரண வெளிகளூடாக
குறித்த இரவை நோக்கிய
அபத்தம் நிறைந்த வாழ்க்கை
முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது

சத்தமில்லாமல் பெய்யும்
பனிபோல அந்த இரவு
இன்னும் சற்று நேரத்தில்
வரப்போகிறது

புரிய முடியவில்லை
கடவுளின் குறி
இனி என்னவாக
இருக்கப் போகின்றதென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 02

இங்கே
எங்களில் சிலர்
புரட்சிக்காரனாக
முற்பட்டு
கவிஞனாகி போனவர்கள்

இன்னும் சிலர்
கவிஞனாக
முற்படும் வேளையில்
புரட்சிக்காரனாக
மாற்றமடைந்து போனவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊமைக் கால்கள்

மறைவுகளின் பின் தோன்றும்
ஊமைக் கால்கள்
நிர்வாண உருவங்கள்
மதில்களில் தொங்கும்
உள்ளாடைகள்
ஆளில்லா வீடுகளென
அப் பேரமைதி
ஊர்ந்து கொண்டிருக்கிறது
அவ் அமைதியின்
வேலிகளுக்குப் பின்னால்
நிராதரவான முகங்கள்
அவற்றை உட்பதிக்க
முற்படும் குறிகள்
பரிணாமங்களை எச்சரிக்கின்றன
அவ் வீடுகளுக்குள் மறைந்த
ஊமைக் கால்களின்
ஒன்றித்த பேரமைதியோடும்
மதில்களில் தொங்கும்
உள்ளாடைகளோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்று நாள் முன்னரான வலிமை

எங்கோ
சிதறிப்போன
பிழம்புகளை
விழுங்கி உமிழ்வதற்காக
புறப்பட்ட கதிர்கள்

கீற்றுக்களோடும்
மலைகளோடும்
அலைகளோடும்
நிலத்தோடும்
பரந்த அகன்ற
மரத்தோடும்
முட்டித் தீர்த்து

ஒருவாறு
விழுங்கி உமிழ்ந்தன
நிராதரவாய் நின்ற
பனித்துளிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரதின வாழ்த்துக்கள்

தூக்கம் வராத இரவுகளில்
நேர்த்திக் கடன்களுக்காக
உயிரகற்றும் பலியிடங்களில்
காத்துக்கிடக்கிறார்கள் சிலர்

எங்கும் கறுப்புமை பூசிய
இரும்புக்கைகளோடு தயாராக

இழுத்துச் சென்ற
பெண்களின்
முலைகள் கடித்துத் துப்பப்பட்டன
குறிகளும் கிழித்தெறியப்பட்டன
கண்கள் பிடுங்கப்பட்ட
ஆண்கள்
குறி அறுந்தவர்களாய்
எரியூட்டப்படுகின்றனர்

சற்று நேரத்தில்
நானும்
கண்களின்றி
குறியிழந்தவனாக

அதற்கு முன்
நானொரு உண்மையை
சொல்ல வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிபீடங்களுக்கு
முன்னிருந்த சிலை
கையில் எவ்வித
ஆயுதங்களையும்
வைத்திருக்கவில்லை
இரத்த வெறிக் கண்கள்
கொடூர பற்கள்
கொலை வெறி முகம்
எதையுமே அது
கொண்டிருக்கவில்லை

உதட்டோர சிரிப்பு
மூடிய கண்கள்
கட்டிய கை
மடிந்த பாதம்
உலகறிந்த வெள்ளை மனம்

உண்மையில் இவ்வாறுதான்

இதோ
என் குறி அறுத்து
சிவப்பாக்கப்படுகிறது
அந்தச் சிலை

யாரோ என்னிடம்
கூறுகிறார்கள்
சுதந்திரதின வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - *03*

இல்லை இல்லை

இங்கே இழத்தலுக்கும்
அங்கே பெறுதலுக்கும்
ஒன்றுமே இல்லை

வலிகளைத் தவிர
ஏமாற்றங்களைத் தவிர
துரோகங்களைத் தவிர
வெப்புசாரங்களைத் தவிர
வெறுமையைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைதல் ஊடகம்

திடீரென்று எங்கிருந்தோ
வந்தார்கள்

கடல் வழியாகவும்
ஆகாய வழியாகவும்
தரை வழியாகவும்

இங்கிருந்து துரத்தினார்கள்
அங்கே ஓடினோம்
அங்கிருந்து துரத்தினார்கள்
இங்கே வந்தோம்

இங்கேயும் துரத்த
எத்தணிக்கிறார்கள்
எல்லைக் கோடுகள் தாண்டிய

கடல் வழியாகவும்
எட்டிவிட முடியாத
ஆகாய வழியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் தவிப்புக்கள்

இந்த வாழ்க்கையை
சங்கடங்களின்றி
நடத்த முடியவில்லை
விடியலின் ஆதியிலும்
இரவின் அந்தத்திலும்
அவை மீண்டு கொண்டுதான்
வருகின்றன

தேநீரில் இனிப்பு
குறையும் போதும்

சாயமிழந்த ஆடைகளை
அணியும் போதும்

நீரில்லா கழிவறையினுள்ளும்

பொருத்தமற்ற
உள்ளாடைகளோடும்

ஒழுங்காய் புணராத
குறிகள் நிறைந்த இரவினுள்ளும்

ஒவ்வொரு சோதனைச் சாவடியின்
அடையாள வகுப்பின் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வளைப்புக்குள்ளும்

சில வார்த்தைகளூடாக
சங்கடங்கள்
திரண்டு கொண்டுதான்
வருகின்றன

சில வேளைகளில்
பயங்கரமான சகஜமான
மௌனத்தினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 04

ஒரு குறி
உயிர்ப்பின் இரகசியத்தை
உள்வாங்கும் இரவுகளில்
உயிர்க் குறி நகர்கிறது
தொண்டைக்குழி வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய் மரங்கள்

வணக்கத்துக்குரிய
பெரிய பச்சை மரங்கள்
அன்று பேய்களாய் மாறின

நீர்களை வெறுத்து
ரத்தங்களை போஷித்து

காற்றுக்கு சந்தமிடாது
மூச்சுக்களை உறிஞ்சி

தண்டுகளை விலாக்களாக்கி
கிளைகளை நகங்களாக்கி

பூக்களை பற்களாக்கி
நிழல்களையெல்லாம்
மரணங்களாக்கி வாதித்தன

அன்றைய நாளில்
அதன் விரிந்த கிளைகளோடும்
நிலம் விழுந்த விழுதுகளோடும்
பிணம் தின்று ஜீரணித்தபின்

மீண்டும்
வணக்கத்துக்குரியதாயின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் அறிந்திருக்க வேண்டும்

காய்ந்து கிடக்கும் புற்தரை
சவக்காலை மதில்களில்
குமரிகளுக்காக காத்துக்கிடக்கும்
இளைஞர்கள்

நடத்தல் ஓடுதல்
பிடித்தல் பாய்தல்
என அகன்று விரியும்
அவ்விடம் ஓர் நாள்
மௌனித்தது

இருத்தலை
பறைசாற்றியவர்களும்
சருகைக் கண்டு
தீ அஞ்சாது என்று
அறியாதவர்களும்
அங்கு தங்கள்
பச்சை உடைகளையும்
கழட்டிப் போட்டார்கள்
பார்வையாளருக்காக

எல்லோரும் போனார்கள்
எல்லோருமாகவும் போனார்கள்
அங்கிருந்தும் இங்கிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றும் இன்றும்

இது போன்றதொரு காலத்தில்
எந்தவொரு
செவ்விந்தியனும்
பலஸ்தீனியனும்
லிபியனும்
ஈராக்கியனும்
குர்தியினனும்
இப்படியான இடத்துக்கு
சென்றதாக பதிவுகள் இல்லை

அவர்கள் கட்டாயம்
அறிந்திருக்க வேண்டும்

கருக்கலைப்புக்குப் பின்
கருவை கலைத்தமைக்கான
சான்றுகளும் கருவிகளும்
ஓர் நாளில்
கண்காட்சியாகவோ
கலைக் கூடமாகவோ
கருவறுத்தவர்களால்
கரு அறு(ந்)தவர்களுக்கு
காட்டப்படும் என்பது பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுகட்டம்

அடுத்த கட்ட
உயிரியியல் நகர்வுக்கும்
எங்கள் குறிகள்
வலிமையோடு இருப்பதாக
சொல்கிறார்கள்

இருந்தும்
ஒவ்வொரு அந்தர நிலையிலும்
தோற்கும் சுயமூட்டல்களின்
போதுமட்டும்
சந்தேகமாகத்தான் இருக்கிறது
எங்கள் குறிகளின் வலிமைத்
தன்மை தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிக்கை

இரகசியப் பேச்சுக்கள்
அந்தரங்கப் பேச்சுக்கள்
எல்லாம்
அறைக்குள்ளேயே
முடிந்து போய்விட்டன

அம்பலமாய் நடந்த
சில பொய்ப் பேச்சுக்களையும்
ஓசையின்றி நடந்த
சில உண்மைப் பேச்சுக்களையும்
ஒன்று திரட்டி

மீண்டும்
தயாராகக் காத்திருந்தது
விலைமதிப்பற்ற அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலனமற்ற புரட்சி

சிதறித் தெறித்த பனித் துளிகள்
புல்லின் நுனியிலும்
பூவினுள்ளேயும்
தரித்துவிடுகின்றன

மூர்கத்தனமான இரவுகளில்
புல்லோடும் பூவோடும்
உறவாடி
பனித்துளிகளின் வாழ்க்கை
இருள் மரங்களோடும்
கழிகிறது

இருப்பிழந்த அவை
உள்ளாடை கனவுகளுக்கும்
சில நிமிடங்கள்
வலிமை அளிக்கின்றன

குறி கணத்து
மயிர் கூச்செறியும்
அவ் இரவுகளில்
எவரும் பனித்துளிகள்
பற்றி சிந்திப்பதில்லை
அதன் படர்தல் பற்றி
பேசுவதுமில்லை

விடியல் இல்லாமையால்
பனித்துளிகள்
செய்தித் தாள்களில் கூட
தலைப்பிடப்படுவதுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்தலும்
குளிரூட்டப்படலுமான
அவற்றின் புரட்சி தொடர்பாக
இங்கெவரும்
அறிந்திருக்கவில்லை

உண்மை எதுவெனில்
உறங்கிக் கிடப்பவர்கள்
எப்போதுமே
விழிப்புக்களை
கருத்திற் கொள்வதில்லை
என்பதுதான்
வெடித்துப் பிளக்கும்
நிலம் கூட
அவற்றின் இருப்புப்பற்றி
மௌனித்து விடுகிறது

பச்சையத்தை தவறவிட்ட
மரங்களோடு ஒன்றித்தவாறே
மீண்டும் படர்கின்றன
பனித்துளிகள்

எங்கோ

ஆகாயத்தில்
மலைகளில்
மயானப் பூக்களில்
வெம்மை வெடிப்பில்

இன்னும்
ஒரு துளி உதிரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வையில்
ஒரு விந்தில்
இது போன்ற வரிகளில்
உயிர்க்கத்தான் செய்கின்றன

பனித்துளிகளின்
உயிர்ப்பின் இரகசியம்
சாவினுள் வாழ்தலின் தத்துவம்
அதன் சுயதரிசனம் பற்றி
எவருமே சிந்திக்கவில்லை

நேற்றும் இன்றும் நாளையும்
பனித்துளிகளைப் போல்
சலனமில்லா புரட்சியினூடாக
உயிர்த்தலை இங்கு எவரும்
இன்னும் சிந்திக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி எதைத்தான் செய்ய முடியும்

எதையுமே
வேண்டுமென்று புனைவதில்லை
எதுவும் அவ்வாறு
புனையப்பட்டதும்
படுவதும்
படப் போவதுமில்லை

யதார்த்த சம்பவங்கள்
எதேட்சையான செயல்கள்
பரீட்சையமில்லா வரிகளை
தூண்டிவிடுகின்றன

காய்கள்
பழங்களாக மறுக்கும் போது
புகையிடலையும்
கட்டிவைத்து
மஞ்சலடித்தலையும் தவிர
எம்மாலும் இனி எதைத்தான்
செய்யமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிவாளப் பிரயத்தனம்

குதிரைச் சவாரி செய்பவர்கள்
பலசாலிகள்

விரையும் குதிரையோடு
காற்றைக் கிழித்து
செல்லக் கூடியவர்கள்

அவர்கள் குதிரைகளை
கடிவாளம் கொண்டு
கட்டுப்படுத்துகிறார்கள்

குதிரைகள் விரைகின்றன
குறித்த இலக்கை நோக்கியதாக

வேகமாக நேர்த்தியாக
கடிவாளங்கள்
இறுகப் பற்றப்பட்டன

அங்கே
கடிவாளமற்ற வீரர்கள்
தரையில் புரளும்
பொழுதுகளில்
வீரர்களற்ற குதிரைகளும்
இலக்கையடைந்தன

வேகமாக
நேர்த்தியாக
காற்றைக் கிழித்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 05

சுதந்திரம்
புனிதமானது
இறைவன் போன்றது
அது அடிமைகளைப் போல்
எல்லோருக்கும் கிட்டுவதில்லை

ஆதலால்
இன்றிலிருந்து எல்லோரும்
அடிமைகளாகத்தான் வேண்டும்

இறைவனை உணர்தலின்
பொருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு

கல்லாலும் மண்ணாலும்
உருப்பெற்ற
வீட்டிலிருந்து சிதறிய
என் பாட்டன் கால
ஒற்றைக்கல்
இடிந்து புதைந்த
வெள்ளை வீட்டின்
உண்மைக் கதையை பேசுகிறது

இறந்து போன நிலத்திலிருந்து

அழகாய் வார்த்த தம்முள்
வளர்ந்த மரம் பற்றியும்
அம்மர நிழலில்
பிள்ளையாரை
பிரதிஷ்டை செய்ய நினைத்த
என் பாட்டன் பாட்டி பற்றியும்
அவர்தம் இலட்சியக் கனவு பற்றியும்
அதன் தாமதம் பற்றியும்

வேர் படர்ந்து
கிளைபரப்பி
அம்மரம்
விருட்சமான அன்று

வெள்ளை வீட்டுக்கு
சிலர் வேலி போட்டதாகவும்
சப்பாத்து மனிதர்களும்
விசிறிக்காரர்களும்
வந்ததாகவும்
அங்கே
புதையுண்டு போன
பாட்டன் பாட்டி
பழைய ஆடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேகை படிந்த பொருட்களென
நிலம் புதைந்த எங்கள்
வரலாற்றுக்கு மேல்
வேதமோதும் சிலரையும்
காட்டியது கல்

கல்லிடமிருந்து நான்
விடைபெற வேண்டும்
உடனடியாக
மிகவும் கட்டாயமாக

ஏனெனில்
எங்கள் புதிய வெள்ளை
வீட்டு அத்திவார துளையிலும்
அதுபோன்றதொரு
மரம் வளர்வதாகவும்

அந் நிழலில்
பின்னொரு நாளில்
வீரபத்திர கடவுளை
பிரதிஷ்டை செய்யலாமென
அப்பாவும் அம்மாவும்
பேசியதாகத் தெரிகிறது

ஆம் இதுவும்
இலட்சியக் கனவுதான்

நேற்றைய பாட்டன்
இன்றைய அப்பன் போல்
இனி என்னாலும்
இலட்சியக்கனவு காண முடியாது

இனியும் நான்
கனவுகளை
அனுமதிக்கவும் இயலாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌர்ணமி இருள்

எனக்கு நினைவுக்கு வருகிறது
புழுப்பூத்த ஆயிரம்
முகங்களையும்
ஊனங்கள் வழிந்த
ஆடைகளையும்
ஏந்தியிருந்த அந்த இரவு

நிலமோடு சரிக்கப்பட்ட
பனைகளிலே தொங்கவிடப்பட்ட
மார்புகளும்
தென்னைகளில் தொங்கிய
விதைப்பைகளுமாக
நிசித்துக் கொண்ட இரவது

அவனின் ரேகைகள்
வழியான இரத்தமும்
அவளின் கருப்பைச்
சுவரூடான இரத்தவும்
மலம் கலந்த உணவு
சிறுநீர் கலந்த நீரென
உருப்பெற்ற அவ்விரவு

அது
பௌர்ணமி இரவும் கூட
அன்று என் மரியாதைக்குரிய
புத்தனின் தலைக்கு வெளியே
சந்திரன் முழுதாய் நின்றதும்

எனக்கு
நினைவுக்கு வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 06

ஒரு
சிறிய அடக்குமுறை
புரட்சியாளனை
உருவாக்க வல்லது
ஒரு புரட்சியாளனால்
வெகு புரட்சி உருவாகக் கூடியது

இதே வரிகளை
வேறு இன்னொருவரும்
இந்த நாட்டில்
எழுதலாம்
எழுதி இருக்கலாம்

இனியும் எழுத
முயற்சிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டைனோசர்கள்

டைனோசர்கள் பற்றி
நாம் அறிந்திருக்கிறோம்

அவை
பெரியன வலியன
என்று கதைத்திருக்கிறோம்

அவை தொடர்பான
வாசகங்கள்
பெருமிதம் கூறுமாறே
எமக்கு பதிக்கப்பட்டன

டைனோசர்களின் வீரம்
அவற்றின் தாக்குதிறன்
போராட்ட குணம்
குறிப் பாய்ச்சல்
என்பன பற்றியும்
விஷ்தரிப்புக்கள்
போஷிக்கப்பட்டன

டைனோசர்கள்
தொடர்பாக எல்லாம்
சொல்லப்பட்டது
முடிவில்லா
அடர்காடுகளில் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைத்தாமே
கடித்துக் கொண்டதாகவும்
காட்டிக் கொடுத்து
அழித்ததாகவும் கூட
செய்திகள் வந்தது

டைனோசர்கள்
அழித்துக் கொண்டதாகவும்
அழிக்கப்பட்டதாகவும்
முற்றாய் ஒடுக்கப்பட்டதாகவும்
ஊடகிக்கப்பட்டது

அன்றும்
டைனோசர்களின்
உரிமையாளர்கள்
அறிவித்திருந்தார்கள்

தாம் பெரியவர்கள்
வலியவர்கள்
என்ற ஒற்றைச் சாசனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் பற்றி நான்

குறியாடல்களின் பொழுதுகளில்
என் இரத்த நாற்றங்கள் தொடர்பாக
உனக்கு எந்தக் கவலையும்
வேண்டாம்

என் குறிகளுக்கு
இரத்தம் புதிதிதான ஒன்றல்ல
குறி வழியாக அது
என்னில் பல கதைகளை
எழுதியிருக்கிறது

ஒவ்வொரு மாத
நாட்சுழலின் போதும்

விறைத்த குறிகளின்
துளை கடக்கும்
வன் கலவியின் போதும்

நிறைமாத கருச்சுவரில்
படிந்திருக்கும் போதும்

சீழ் தெறிக்கும் குடமுடைக்கும்
பிரசவத்தின் போதும்

முலைகாந்தும் பற்கள்
பதிந்திடும் போதும்

இரத்தம் பல கதைகளை
எழுதியிருக்கிறது

ஆதலால் சொல்கிறேன்
என் இரத்த நாற்றம் பற்றி
இனியும் உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கவலையும் வேண்டாம்
மன உறைக்குள் தேங்கிய
உன் பற்றியதான
ஆசைகளோடு
உன் நலனுக்காய் பாடும்
என் ஆத்மாவின் ஓசை
மகரந்த நோக்கம்
நிறைவேறிய வண்டாய்
மயங்கும் உனக்கு
ஒரு போதும் கேட்பதில்லை

நோ மிகுந்த காலிடைகளின்
துடிப்பையும் வலிகளையும்
எச்சில் உறிஞ்சும்
எத்தடவையிலும்
நீ கவனிப்பதாகவும் இல்லை
உனக்காக ஆயிரமாயிரம்
கனவுகளோடு ஏங்கும்
என் பற்றி உனக்கு
இன்னும் தான் தெரிவதாயில்லை

இனியும் உனக்கு
எந்தக் கவலைகளும்
வேண்டாம்

எல்லாம் போகட்டும்
இன்று இதை மட்டும்
சொல்லிவிடுகிறேன்

உன் பற்றி நான்
இன்னும்
உயிரோடுதான் இருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளும் சுவாலையும் இறுதி விந்தும்

ஆதியின் முதல் மனிதன்
மூட்டிய தீ
சமிபாடடையாத பாதைகளில்
காலூன்றியவாறே
பயணிக்கிறது

கடினமாகவும்
ஒற்றையாகவும்
பிரதானமாகவும்
பாதைகள் மாறிய போதும்
பயணங்கள் தொடர்கின்றன

நீண்டு நெழியும் வழிகளில்
அந்தத்தை அடைவதன்
பொருட்டு அவை
மீண்டும் மூட்டப்படுகின்றன

புதிதாய் பிறந்த
அக்கினிக் குஞ்சுகளும்
அவ்வாறே பயணிக்கின்றன

அந்தத்தில் தன் சுவாலையை
தனிக்க காத்திருக்கும்
இறுதி விந்தை நோக்கியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 07

நாட்டுக்குள்
நாய்களின் பரிணாமம்
குள்ள நரிகளாகிக் கொண்டே
போகின்றது

தடைகளேதுமின்றி

சில பகுதிகளில்
நரிகளும் நாய்களுமாக
இன நிறுவலில்
பெருகி திரிகின்றன

பாவம்
அவை அறியாது போலும்
வேங்கைகளின் பரிணாம வீழ்ச்சி
நாட்டிலுள்ள
பூனைகள் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலட்டு விதைகள்

நீண்ட வருடங்களின் முன்
விதைகளெல்லாம் அறைகூவின

எங்களை புதையுங்கள்
ஆழமாய்
இன்னும் ஆழமாய் புதையுங்கள்

அப்போதுதான்
எங்கள் விருட்சங்கள்
தடைகளை தகர்க்கும்
தவ வலிமையை பெறக்கூடும்

எங்கள் இனத்தை
வேர் அறுக்கையில்
வேர்களை ஆயுதமாக்கவும்
தேனை விஷமாகவும்
கிளைகளை முட்களாகவும்
நாங்கள் காவக்கூடும்

எரித்தாலும் சாம்பல் பறவைகளாகும்
எங்களை ஆழமாக
இன்னும் ஆழமாக புதையுங்கள்

புதைத்தார்கள்
ஆழமாக
இன்னும் ஆழமாக

நல்லின விதைகளுக்குள்
ஒரு சில
மலட்டு விதைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பிடாத வரிகள் - 08

இத் தேசத்தில் வார்த்தைகள்
ஒரேவிதமாக
வெவ்வேறாக
சிவப்பாக
பச்சையாக
கறுப்பாக
இன்னும் பலவாறு
நிறமூட்டப்படுகின்றன

எல்லா நேரங்களிலும்
எல்லா வார்த்தைகளும்
எல்லோராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதையும் பாம்பும்

பாதைகள் முழுவதும்
பாம்புகள் நெளிகின்றன

கடந்து செல்ல முடியாதவையாக
நீளமாகவும்
கட்டையாகவும்
எழுந்தும் சீறியும்
நொளுநொளுக்கின்றன

பாம்புகள் பாம்புகள்

விஷம்துப்பி
இறுகக்கட்டி முறித்து
விழுங்கவும் முயற்சிக்கின்றன

நிலத்தில் கொத்தி
பலிச்சபதம் ஏற்கின்றன

கடந்து செல்ல முடியாதவாறு
கால்களைச் சுற்றி
படமெடுத்தாடுகின்றன

பாம்புகள் பாம்புகள்
பாதை முழுவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டுக் குனிந்து
மடிந்து தலை வீழ்த்தி
நேர்த்திகள் செலுத்தி
பாம்புகள் கடந்த நிலையில்

பாம்புகளாடிய
விரிந்தகன்ற பாதை
படமெடுக்கின்றது
கடந்து செல்ல முடியாமலும்
நீளமாயும்
கட்டையாயும்
எழுந்தும் சீறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழிக்கால அவதாரங்கள்

அகன்ற வெளியில்
சூரியனை இழந்தவர்களின்
விடியலுக்கான பொழுதுகள்
நீளுகின்றன

ஜாதக கதைபோல்
நிலவையும் விழுங்கி
உமிழ்கிறது சர்ப்பம்

ஒளியிலா
அப் பொழுதுகளில்
யோனிக்குழி புதைகின்ற
குறிகள்
ஊழிக்கால அவதாரங்களாக
சில மணி நேரம்
சூரியனையும் நிலவையும்
ஒத்திகைக்கின்றன

மிகச் சுலபமாயிற்று
தூரத்தில்
ஆயிரம் எரிகற்கள்
விடிவெள்ளி
அதுபோன்றதொரு நிலவு
கிரணங்கள் தெறிக்கும்
கோடிச் சூரியன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலம் விழுங்கி

அலைகள் கொடூரமானவை
அடக்கி விட முடியாதவை

நீண்டும் உயர்ந்தும்
அகன்றும் ஆழமாயும்
ஆர்ப்பரிக்கும் அவையும்
நிலம் விழுங்குகின்றன

எந்தவொரு

ஆயுதங்களோ
சீருடைகளோ
இரும்புத் தொப்பிகளோ
அதிகாரப் பேச்சுக்களோ

எதுவுமே இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றாட்டு

எல்லாம் வல்ல இறையே
கருவியே
எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

எப்போதும் எம்முடனே
இருக்கின்ற
எங்கள் தெய்வமே

தன்னலக்காரன்களோடும்
தேசியக் கூத்தாடிகளோடும்
தீர்க வரிகளற்ற வாதிகளோடும்
இருப்பீராக

இணக்கப்படலுக்கும்
சரணாகதிக்குமான
வேறுபாட்டை அவர்கட்கு
உணர்த்துவீராக

எல்லாம் வல்லரே

அவர்க்கு அடம்பன் கொடியின்
மிடுக்கையும்

குருவிச்சைகளின்
தூரநோக்கையும்
அறியச் செய்வீராக

தங்களை தாங்களே
பீனிக்ஸ் பறவைகள் என்று
சுவற்றிலே விளம்பரிக்கும்
அவர்களுக்கு
வசந்த எதிர்பார்ப்பை
நிவர்த்திக்கும் குயிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாய் கூடும்
காக்கைகளையும்

உறுமீனுக்கான ஒற்றைக்கால்
கொக்கையும் காண்பிப்பீராக

பாலையும் நீரையும்
பிரிக்கத் தெரியாத அந்த
வெள்ளை உடை பறவைகட்கு
சொன்னதைச் சொல்லும்
கிளிப்புத்தியை இல்லாது
ஒழிப்பீராக

எம்மோடே இருக்கின்ற
எங்கள் பிதாவே
அவர்களோடும் இருப்பீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி வாசகம்

இரத்த முலாமிடப்பட்ட தென்றலோடு
செருகப்பட்டுள்ள
ஒவ்வொரு இரவினுள்ளும்
அழிவின் கதறல்களோடும்
அழியாத நம்பிக்கைகளோடும்
நான் உங்களிடம் வருகிறேன்

என்னுடைய ஆத்மா
உங்களுக்கான
சிலுவைகளை சுமந்து செல்ல
தயாராக காத்திருக்கிறது

என்னிடம்
எழுதுவதற்கும்
எழுதிமுடிப்பதற்கும்
இன்னும் எவ்வளவோ
இருக்கின்றன
என் பின்
அதைச் சொல்வதற்கும்
சொல்லித்தருவதற்கும்
உங்களுள் பலர் இருப்பார்கள்

சில வேளைகளில்
என்னுடைய
பைத்தியக்காரக் கதைகளை
யாரும் எழுதியிருக்க முடியாது
போகலாம்

இப்போதும் அதன்
மீதுதான் என்னுடைய
கவனம் கவிந்திருக்கிறது
எல்லோரும் அதை மறந்து
எதையோ தேடி அலைகின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் எல்லோரது வாழ்வும்
இடைவிடாது தேடலை கொண்டாலும்
ஏதோவொரு மகிழ்வைத்தான்
குறி வைக்கின்றது

நீங்கள்
கடலில் இறங்கவும்

தீயில் குதிக்கவும்
பழகியவர்கள்

இழந்து இழந்து
இழத்தலின் மூலம்
பெறுதலின் சுகத்தை
அனுபவிப்பவர்கள்

கடிகார முட்களைப் போல்
அமைதியான
ஒரு நிமிட பெருமூச்சுக்காக
இடைவிடாது
போராடிக் கொண்டிருப்பவர்கள்

இருளின் வீரியத்தில்
விடியலை உணர்ந்தவர்கள்

மனதினாழத்தில்
கவலைகள் கிடந்தாலும்
உதட்டுச் சிரிப்போடு
யாத்திரை போகின்றவர்கள்

என்னைப் போலவே

உங்களிடந்தான்
சொல்ல வேண்டும்
சொல்லியுமாக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு தாக்கத்திற்குமான
மறுதாக்கம்
இன்று
இக் கணத்தில்கூட தோன்றலாம்
என்பது பற்றி

உங்களிடந்தான்
சொல்ல வேண்டும்
சொல்லியுமாக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறி தவறிப்பட்ட
கற்கலிலும்
தமது பார்வையை
திருப்பியவாறு
கூறினார்கள்
குறி வைக்கப்படாத
அவையும் தம்மால்
குறிவைக்கப்பட்டவை
என்று



சிறகுகள்

ISBN 978-955-53380-1-1

விலை - 150.00

Printed by: SS Digital's - 026 22 24 933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org